18. 02. 2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண். 375/2021

அ.சா.16

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பரணிநாதன் | | |
| த/பெ | நா.கண்ணப்பன் | | |
| கிராமம் | விழுப்புரம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 55 /2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னை அய்னாவரம் காவல் நிலையத்தில் சட்ட ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 25/04/2021 ந் தேதி விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியலிருந்து போது விக்கிரவாண்டி தாலுக்கா சிவபெருமான் பாளையத்தை சேர்ந்த ஐய்யப்பன் மனைவி நதியா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்துமூலமான புகாரைபெற்று நிலைய கு.எண்.221/2021 இதச பிரிவுகள்.294(பி), 364, 323, 324, மற்றும் 307 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ- 17 ஆகும். முதல் தகவல் அறிக்கையில் அசலை நீதித்துறை நடுவர் விக்கிரவாண்டி அவர்களுக்கு முறையாக அனுப்பி வைத்தேன். நகல்களை முறையாக உயர் அதிகாரிகளுக்கு அனுப்பினேன். வழக்கு கோப்பினை விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்புவித்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரில் எந்த தேதியில் புகார்தாரர் அவரது தாய் வீடான பண்டசோழநல்லூருக்கு சென்றார் என்று இல்லை. புகார்தாரர் நதியா பண்டசோழநல்லூரிலிருந்து சம்பவ கிராமத்திற்கு திரும்ப வந்தார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரியின் மனைவியை இறந்துபோன ஐய்யப்பன் தாக்கியது சம்மந்தமாக புகார் அளிக்கப்பட்டு மனவேதனையிலிருந்த என் கணவர் எங்கேயோ சென்றுவிட்டார் என்று தான் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். அந்த சம்பவத்திற்கு பயந்துக்கொண்டு எங்கேயோ சென்றுவிட்டார் என்று தெரிவித்துள்ளார். எங்கள் காவல் நிலைய குற்ற எண்.215/2021 ல் 2 ம் எதிரி சரவணன் கொடுத்த புகாரின்அடிப்படையில் சட்டப்பிரிவுகள். 294(பி), 323, 324, இதச உ/இ 4 TNWH Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். திருக்கனூர் ஏரிக்கரையில் எந்த இடத்தில் அவரது கணவர் இருந்தார் என்று குறிப்பிடவில்லை. ஏரிக்கரை என்று தான் குறிப்பிட்டுள்ளார். ஐய்யப்பன் தங்கியிருந்த இடம் 1,2 எதிரிகளுக்கு எப்படி தெரியவந்தது என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முனியம்மாள் வீடு கட்டும் இடத்திற்கு எதிரில் சத்தம் கேட்டு போய் பார்த்ததாக தான் சொல்கிறார் என்றால் சரிதான். அங்கு 3, 4 எதிரிகள் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் நதியா போனதற்கு பிறகாவது 3, 4 எதிரிகள் அங்கு வந்ததாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லி உள்ளார்கள். 3,4 எதிரிகள் சம்பவ இடத்திற்கு எப்படி வந்தார்கள் என்று நதியா சொல்லவில்லை. இருந்தார்கள் என்று மட்டும் தான் சொல்லியுள்ளார். புகார்தாரர் அடித்துள்ளார் என்று தான் புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2 வது சம்பவத்தில் 3 வது எதிரி குமரவேல் அவரது கையில் வைத்திருந்த தடியால் தாக்கியதாக கூறப்பட்டுள்ளதே தவிர எரிந்த நிலையில் உள்ள கட்டையால் தாக்கப்பட்டதாக கூறவில்லை என்றால் சரிதான். 1, 2 எதிரிகள் தாக்கியதாக புகாரில் உள்ள இரண்டாவது சம்பவத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மூன்று சம்பவ நிகழ்வுகளுக்கும் கால வரையறை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன், பிரகாஷ் ஆகியோர் சம்பவங்களை கண்ணுற்றது போல புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஓடியதாக சொல்லியுள்ளார்கள். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது போல் குற்ற சம்பவம் நிகழவில்லை என்றும், ஏற்கனவே இரண்டாவது எதிரியின் மனைவி ஐய்யப்பனால் தாக்கப்பட்டது தொடர்பாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பு எங்கோ தலைமறைவு ஆன ஐய்யப்பன் காயம்பட்டதை பயன்படுத்தி எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்துடன் கொடுக்கப்பட்ட பொய் புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த புகாரில் கூறியுள்ளவாறு எதிரிகளால் ஐய்யப்பன் காயம் அடைய வில்லை என்றும், உள்நோக்கத்தோடு கொடுத்த புகாரை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை மறுநாள் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுக்கப்பட்டது நள்ளிரவு என்பதால் மறுநாள் அனுப்பப்பட்டது.

**மறுவிசாரணை**

**இல்லை**